[10th November 1965

திரு. வை. சங்கரன் : மேற்கே ஓடும் நதிகளின் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்திக்கொள்வது சம்பந்தமாக நமது அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் சமீபத்தில் ஒரு உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நீர்ப்பாசனம் சம்பந்தமாக இல்லை. மின்சாரத் திட்டம் சம்பந்தமாகத்தான் நமது தொழில் அமைச்சர் அவர்களுக்கும், கேரள அரசாங்க அதிகாரிகளுக்கு மிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

மேம்பாலங்கள்

* 438 கேள்வி.—திரு. அ. ப. அழகமுத்து : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில், முசிரிக்கும் குளித்தலைக்கும் இடையே ஓடும் காவிரியாற்றின் மீது பாலம் கட்ட வேண்டுமென்று திருச்சி மாவட்டக் கலெக்டரிடமிருந்து சர்க்காருக்கு அண்மையில் சிபார்சு ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம், எனில் அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) No such recommendation appears to have been received from the Collector of Tiruchirappalli. However, there is a proposal for construction of a bridge across the Cauvery between Musiri and Kuzlithalai at a cost of Rs. 55 lakhs. The work is proposed for being taken up during the Fourth Plan period, if the Government of India approve the proposal and give grants-in-aid for it under the Scheme for Development of State roads of Economic or Inter-State Importance.

* 439 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மாத்தூர்-திட்டக்குடி சாலைக்கும், தென்னாற்காடு மாவட்டம், திட்டக்குடி சாலைக்கும் இடையே செல்லும் வெள்ளாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் வேலையை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது துவங்கப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The work of constructing a bridge across Vellar on Mathur-Thittagudi road has been proposed in the draft Fourth Five-Year Road Plan. The actual execution of the work in the Fourth Plan period will depend upon availability of funds.